https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# புறநானூற்றில் மகளிர்க்குரிய பழக்கவழக்கங்கள்

**முனைவர் செ. சுதா**
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்
ஜெயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருநின்றவூர்

ஆய்வுச் சுருக்கம்

பண்பாடு – பழக்க, வழக்கம் விளக்கம் - பெண்கள் பூச்சூடாச் சூழல் - சங்க கால மகளிர்க்குரிய பழக்கவழக்கங்கள்-கலந்தொடா மகளிர் - தொழில் அடிப்படையில் சங்க இலக்கியங்களில் சுட்டப்பெறும் மகளிர் பெயர் - கைம்மை நோன்புடைய மகளிர் அணிகலன் களைதல் - தபு தார நிலை குறித்து தொல்காப்பியர் கூறும் கருத்து - அரச மகளிர் தீப்பாய்தல் - புறநானூற்றில் மகளிர் தீப்பாய்தல் - கைம்மை நோன்பிருக்கும் மகளிர் குறித்த உரையாசிரியர் கல்லாடனார், ஆய்வறிஞர் டாக்டர். மா. இராசமாணிக்கனார் போன்றோரின் கருத்துகள் - கடமை மகளிர் - கூந்தல் கொய்தல் - தருப்பை, கீரை போன்ற உணவுகளை உட்கொள்ளும் உணவுமுறை போன்ற கருத்துகளை ஆய்ந்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்காம்.

## புறநானூற்றில் மகளிர்க்குரிய பழக்கவழக்கங்கள்

இலக்கியங்கள் அவ்வக்காலச் சமுதாயப் பண்பாட்டு நிலைகளை வெளிப்படுத்துவன. சமுதாயத்தின் இயல்புப் போக்கிற்கு ஏற்ப உருப்பெறுவதும், காலப்போக்கிற்குத் தக்க மாறுபடுவதும் இலக்கியத்தின் இயற்கைப் பண்பாகும். பழக்க வழக்கங்கள் மனித சமுதாயத்தின் தேவை கருதிப் படைக்கப்பட்டவைகளாகக் காணப்படுகின்றன.

பழக்கம் என்பது ஒரு கற்கும் செயலாகும். இது தனிமனிதனிடம் இயல்பாக அமைந்த நடத்தையைக் குறிப்பதாகும். பழக்கத்தின் தொடர்ந்த நிலையே வழக்கம் ஆகும். வழக்கம் சமூகம் சார்ந்த ஒன்றாகும். புறநானூற்றில் மகளிர்க்குரிய பழக்க வழக்கங்கள் சில இடம் பெற்றுள்ளன.

> " அருந்துயர் உழக்கும் நின்திருந்திழை அரிவை
> .........பூண்க நின்மாவே "[1]

என்ற புறப்பாடல் கணவனைப் பிரிந்திருந்த காலத்தில் பூச்சூடமாட்டார்கள் என்பது இப்பாடலடிகள் மூலம் தெரிகிறது.

பெண்கள் பூப்புற்றிருக்கும் காலங்களில் தூய்மை இல்லாதவர்களாகக் கருதப்படுவர். அக்காலங்களில் வீட்டுப் பொருட்களைத் தொடாமல் ஒதுங்கி வாழ்ந்தமையால் 'கலந்தொடா மகளிர்' எனப்பட்டனர்.

"பூப்புற்ற மகளிர் மனைகளில் கலந்தொடாது, விலகியிருந்து, தாம் பூப்புற்றமை தெரிவிப்பது தமிழர் மரபு. பூப்புத் தோன்றும் மகளிர்க்கு அதன் வரவு முன் கூட்டி அறிய வாராமையின் அதன் வரவைத் தாம் விலகி நின்று நாணிக் காட்டும் இயல்புப் பற்றிக் கலந்தொடா மகளிரினிகழ்ந்து நின்றவ்வே"[2] என்று ஔவை.சு.துரைசாமிப்பிள்ளை கூறுகின்றார்.

கணவனை இழந்த மகளிர் 'கைம்மை மகளிர்' எனப்படுவர். இவர்களை இன்று கைம்பெண்,

விதவை என்று அழைக்கின்றோம். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் இவர்களின் நிலை, தொழில், தோற்றம் ஆகியவற்றின் அடிப்படையில், ஆளில் பெண்டிர், பருத்திப் பெண்டிர், உயவற் பெண்டிர், கழிகல மகளிர் என பாடல்களில் குறிக்கப் பெறுகின்றனர்.

**" ஆளில் பெண்டிர் தாளிற் செய்த**

**........பனுவல் போல "[3]**

" ..........

கழிகல மகளிர் போல "[4]

"........

**உயவற் பெண்டிரே மல்லேம் மாதோ "[5]**

எனப் பல நிலைகளில் வருவன பார்க்கலாம்.

தொல்காப்பியர் நிலையாமையினை வலியுறுத்தும் காஞ்சித்திணையின் துறைகளுள் மனைவியை இழந்த கணவன் நிலையைத் 'தபுதார நிலை' என்றும் கணவனை இழந்த மனைவியின் நிலையைத் 'தாபதநிலை 'என்றும் சுட்டுகிறார்.

**"காதலி இழந்த தபுதார நிலையும்**

**காதலனிழந்த தாபத நிலையும் "[6]**

என்பது தொல்காப்பியம். தொல்காப்பியத்தில் பேசப்படும் இவ்விரு நிலைகளும் சங்க இலக்கியங்களிலும் பேசப்பட்டுள்ளன.

கணவனின் பெரும் பிரிவுக்காக வருந்திய மனைவி தன் உயிரைத் தீப் பாய்தல், வரை பாய்தல் ஆகிய செயல்களின் மூலம் மாய்த்துக் கொள்வர். தீப்பாய்தலை உடன் கட்டை ஏறுதல் என்பர். "பெண்டிர் உடன் கட்டை ஏறி உயிர்விட்டமைக்குக் கற்பித நம்பிக்கைகள் அடிப்படை என்பர்."[7] அவ்வாறு உடன்கட்டை ஏறிய பெண்டிரைச் 'சதி"[8] எனக் குறிப்பர்.

புறநானூற்றில் பூதப்பாண்டியன் தேவியாகிய பெருங்கோப்பெண்டு தீப்பாய விழைதல் குறித்த செய்தி ,

" பல்சான்றீரே பல்சான்றீரே

செல்கெனச் சொல்லாது ஒழிகென விலக்கும்

பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான்றீரே

.....

பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்

நுமக்கரி தாகுக தில்லை எமக்கெம்

பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும்பெற

வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை

நள்ளிரும் பொய்கையும் தீயுமோ ரற்றே "[9]

என்ற இப்பாடல் மூலம் அறியமுடிகிறது. அரச மகளிரும் தீப்பாய்ந்த செய்தியை இப்புறப்பாடல் உணர்த்துகிறது. வரைபாய் தல் என்பது மலையில் இருந்து விழுந்து உயிர் விடுதல் ஆகும்.இது தாங்க முடியாத துக்கத்தால் ஏற்படும் செயலாகவே இலக்கியச் சான்றுகள் அறிவிக்கின்றன .

**"மயங்கு துளி பொழிந்த பானாட் கங்குல்**

**ஆராக் காமம் அடூஉ நின்றலைப்ப**

**இறுவரை வீழ்நரின்நடுங்கித் தெறுதர"[10]**

என்ற பாடல் அடிகளின் மூலம் இதனைத் தெளிவாகக் கூறிச் செல்கிறது. கணவன் இறந்ததும் அவனோடு உடனிறக்காது கடமை கருதி வாழ்ந்து வரும் கைம் பெண்டிர்க்குரிய சில நடைமுறைக் கட்டுப் பாடுகளைக் கொண்டு கடைக் கற்பு மகளிர் உயிர் வாழ்கின்றனர். இக்கைம்மை நோன்பு நோற்று வாழும் கடைக்கற்பினரைக் "கடமை மகளிர்"[11] என்று டாக்டர் வ.சுப.மா. கூறுகிறார்.

கைம்மை நோன்புடைய பெண்டிர் தங்கள் அணிகலன்களைக் களைந்து வாழும் புல்லென்ற தோற்றத்தினர்.

**"அறனில் கூற்றந் திறனின்று துணிய**

**ஊழின் உருப்ப எருக்கிய மகளிர்**

.........

.........

வெள்வேல் விடலை சென்று மாய்ந்தனனே"[12]

**"கண்ணீர்த் தடுத்த ....**

**கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி"[13]**

என்ற புறப்பாடல்களின் மூலம் வளை, தொடி, பூவணிதல் ஆகியவற்றைக் கைம்மை மகளிர் நீக்கி இருந்த செய்தி அறியப் படுகிறது.

கணவன் இறந்தவுடன் கைம்மை பூண்ட மகளிரின் கூந்தல் மழிக்கப்பட்டது. இதனைக் கல்லாடனார், "பாண்டியன் நெடுஞ்செழியன் கைம்மை மகளிர்க்காக இரங்கிப் போர் தவிர்த்த நிலையால்"[14] காட்டிச்

செல்கின்றனர்.

கூந்தல் கொய்தலாகிய பழக்கம் பற்றி டாக்டர. மா. இராசமாணிக்கனார் "மொட்டையடிக்கும் பழக்கம் கணவற்கென வாழ்ந்த மகளிர் பிற ஆடவர்க்குத் தம் எழிலை விளங்கத் தோன்ற விரும்பாரா தலின் உண்டான பழக்கமாகலாம்"[15] என்று தம் கருத்தினைத் தெரிவிப்பார். வேள்எவ்வி இறந்த பின்னர் அவனது மனைவி "வீட்டை மெழுகி, தருப்பைப் படைத்து உணவருந்தி னாள்"[16] என்ற செய்தியைப் புறப்பாடல் தெரிவிக்கிறது.

"வேளை வெந்தை வல்சியாகப்

பரல்பெய் பள்ளிப் பாயின்று வசதியும்

உயவற் பெண்டிர்"[17]

என்ற பாடலடிகள் மூலம் வேளையாகிய வெந்த கீரையினைக் கைம்மை மகளிர் உணவாக உண்ட செய்தி பெறப்படுகிறது .

இவ்வாறாகப் புறநானூற்றில் மகளிர் குறித்த பழக்க வழக்கங்கள், சங்க காலப் பெண் களின் வாழ்வியல் நிலைப்பாடுகள் இன்றைய மகளிர்க்கு வியப்பு தரும் வகையில் மட்டுமே அமைந்துள்ள தன்மையை உணரமுடிகிறது.

## அடிக்குறிப்புகள்

1. புறம், 146: 7-11
2. புறம், ப - 299, ஔவை.சு துரைசாமிப்பிள்ளை உரை
3. நற்றிணை, 33 : 1-2
4. நற்றிணை, 28 : 12-14
5. புறம், 246 : 8-10
6. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா 77 : 28 - 29
7. ந .க .மங்கள முருகேசன், இந்தியச் சமுதாய வரலாறு, ப - 375
8. செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு, 18 : ப - 366
9. புறம், 246
10. அகநானூறு, 322 : 2-4
11. டாக்டர் வ .சுப.மா, இலக்கிய விளக்கம், ப - 32
12. புறம், 237 : 9 -14
13. புறம், .250 : 3 - 4
14. புறம், 25 : 10 -14
15. செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு, 17 : ப - 498
16. புறம், 234 : 2 - 4
17. புறம், 246 : 8 -10

## துணைநூற்பட்டியல்


1. குருநாதன், முனைவர் வ., புறநானூறு மூலமும் உரையும், வடிவேல் பதிப்பகம், தஞ்சாவூர்-4, 2003.
2. துரைசாமி பிள்ளை ஔவை சு. (உ. ஆ), புறநானூறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், 1978.
3. நாராயணசாமி பிள்ளை பின்னத்தூர் அ., நற்றிணை நானூறு மூலமும் உரையும், கழகம், சென்னை, 2001.
4. குருநாதன், முனைவர் வ., புறநானூறு மூலமும் உரையும், வடிவேல் பதிப்பகம், தஞ்சாவூர்-4, 2003.
5. இளம்பூரணர் (உ. ஆ), தொல்காப்பியம் பொருள் அதிகாரம், கழகம், சென்னை, 1973.
6. மங்கள முருகேசன், ந. க., இந்தியச் சமுதாய வரலாறு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1975.
7. செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு .18, பதிப்பு- 1940 – 41.
8. குருநாதன், முனைவர் வ., புறநானூறு மூலமும் உரையும், வடிவேல் பதிப்பகம், தஞ்சாவூர்- 4, 2003.
9. வேங்கடசாமி நாட்டார் நாவலர் ந. மு., அகநானூறு மூலமும் உரையும், கழகம், சென்னை 1961.
10. மாணிக்கம் செம்மல் வ. சுப., இலக்கிய விளக்கம், மணிவாசகர் நூலகம், சென்னை -1, 1976.
11. குருநாதன், முனைவர் வ., புறநானூறு மூலமும் உரையும், வடிவேல் பதிப்பகம், தஞ்சாவூர்-4, 2003.
12. செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு.17, பதிப்பு-1940 -41